## அரசாங்க சேவை சேமலாப நிதியம் - 2017

அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1942 இன் 18 ஆம் இலக்க அரசாங்க சேவை சேமலாப நிதிய கட்டளைச் சட்டத்தின் (621 ஆம் அத்தியாயம்) 24(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் ஐந்தொகை, வருமானச் செலவினக் கணக்குகள் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

நியமம் 1 இன் 7 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானம், செலவினம் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக வருடாந்த கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை 2.4(ஈ)(ii) இன் கீழ் நிதியத்திற்கு பெறப்பட்ட நிதிகள் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததெனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

---

மாதாந்த கணக்குகள் பொழிப்பின் மூலம் பல்வேறு அரச நிறுவனங்களினால் நிதியக் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட வரவு மற்றும் செலவு வைத்தல்களுக்குரிய இனங்காணப்படாத மீதிகளைத் தீர்க்கும் வரையும் சீராக்கல் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக் கணக்கின் வரவு மீதி ரூபா 29,209,393 ஆக இருந்தது. எவ்வாறாயினும் அத் திகதியிலுள்ளவாறான உரிய பட்டோலையின் மீதி ரூபா 23,468,875 ஆனமையால் ரூபா 5,740,518 விளக்கமளிக்கப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது. பட்டியலில் குறிப்பிடப்பட்ட மீதிகளில் ரூபா 12,327,462 தொகை 2 ஆண்டுகள் தொடக்கம் 4 ஆண்டுகள் வரையான மீதிகளாகவும் ரூபா 874,093 தொகை 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட மீதிகளாகவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1942 இன் அரசாங்க சேவை சேமலாப நிதிய கட்டளைச்சட்டத்தின் 2.2 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் கீழ் பங்களிப்புச் செய்த பங்காளர்களிற்கான தனிப்பட்ட கணக்குகள் பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக திரண்ட நிதியத்தில் காட்டப்பட்ட கட்டாய பங்களிப்பு பணக் கணக்கின் ரூபா 21,479,409,368 தொகையான மீதி, அரசாங்க பங்களிப்பு பணக் கணக்கின் ரூபா 33,418,512,038 தொகையான மீதி மற்றும் தொண்டர் பங்களிப்பு பணக் கணக்கின் ரூபா 33,394,939 தொகையான மீதி என்பவற்றின் சரியான தன்மையை கணக்காய்வில் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) பங்களிப்பு பணத்தை மீளச் செலுத்தும் போது பங்களிப்பாளர்களினால் நிதியத்திற்கு செலுத்தப்பட்ட பணத் தொகையை பங்களிப்பாளர்கள் சேவை செய்யும் நிறுவனத்திலிருந்து உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அப் பணம் சரியாக நிதியத்திற்கு பெறப்பட்டதாக நிதியத்தின் கணக்கு அறிக்கைகளில் உறுதிப்படுத்துவதற்கான நடைமுறையொன்று காணப்படாததல் திரண்ட நிதியத்திலிருந்து மீளாய்வாண்டின் போது மீளச் செலுத்தப்பட்ட ரூபா 497,808,187 பங்களிப்புப் பணம் மற்றும் வட்டி மற்றும் மீளச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 474,425,527 பங்களிப்பு பணம் மற்றும் வட்டி பெறுமதிகளின் சரியான தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| 1942 இன் அரசாங்க சேவை சேமலாப நிதியக் கட்டளைச் சட்டம் (621 ஆம் அத்தியாயம்) | |
| (i) 16 (1ஆ) மற்றும் 20 (ஆ) பிரிவுகள் | செயற்திறனின்மை அல்லது கீழ்ப்படியாமை காரணமாக பங்களிப்பாளரொருவர் நீக்கப்பட்டால் அல்லது இடைநிறுத்தப்பட்டால் அல்லது நிதியத்திற்கான பங்களிப்பாளரொருவர் பொதுச் சேவையில் ஓய்வூதிய உரித்துள்ள பதவியொன்றிற்கு நியமனம் செய்யப்பட்டிருந்தால் நிதியத்திற்கான இப் பங்களிப்பு மற்றும் அதன் மீதான வட்டி தொகை பங்களிப்பாளரிற்குச் செலுத்தப்பட வேண்டிய போதிலும் பங்களிப்பாளர் கணக்கிற்கு தற்காலிகமாக செலவு வைக்கப்பட்ட அனைத்து மிகையூதியங்கள் மற்றும் அவற்றின் மீதான வட்டி என்பன திரண்ட நிதிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 474,425,527 கூட்டுத்தொகை அரசாங்க மிகையூதியங்கள் மற்றும் வட்டிகளாக செலுத்தப்பட வேண்டியிருந்தன. |
| (ii) 25 ஆம் பிரிவு | ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததன் பின்னர் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தினால் ஒவ்வொரு ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கத்தவர் கணக்குகளில் உள்ள மீதிகள் தொடர்பாக பங்களிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும், தனிப்பட்ட பேரேட்டுக் கணக்குகள் பேணப்படாததன் காரணமாக அதன் பிரகாரம் நிதியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட முடியாதிருந்தது. |

### 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2014 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்ட ரூபா 141,721 தொகையான முற்பணமாக செலுத்தப்பட்ட மீதி 2017 திசெம்பர் 31 வரையிலும் இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 5,642,414,331 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 5,362,412,053 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 280,002,278 ஆன முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. முதலீடு மீதான வட்டி வருமானம் ரூபா 281,505,452 ஆல் அதிகரித்தமை மேற்படி முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டின் ரூபா 2,757,264,050 மிகை மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 5,642,414,331 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. நிதி விளைவுகளிற்கு ஊழியர் ஊதியம், அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2013 ஆம் ஆண்டின் ரூபா 2,768,124,405 தொகையான நிதியத்தின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 5,736,195,733 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

ஓய்வூதியம் கிடைக்காத அரசாங்கத்தின் சில ஊழியர்களுக்கு நலன்களை வழங்கும் அடிப்படை நோக்கத்துடன் அரசாங்க சேவை சேமலாப நிதியம் உருவாக்கப்பட்டிருந்தது. அந்த நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட 3,704 விண்ணப்பங்களை உள்ளடக்கிய நிதியத்தின் அங்கத்தவர்களினால் நலன்களைப் பெற்றுக்கொள்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த விண்ணப்பங்கள் 9,376 ஆக இருந்ததுடன் அதில் 8,422 விண்ணப்பங்களுக்காக ரூபா 497,808,187 செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் 954 விண்ணப்பங்களிற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தின் அங்கத்தவர்களுக்கான கட்டாய வட்டியான 2.5 சதவீதத்துடன் மீளாய்வாண்டிற்காக 13 சதவீத வட்டி விகிதமொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்காக 12.34 சதவீதம் மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டிற்காக அங்கத்தவர்களுக்குச் செலுத்தப்பட்ட வட்டி விகிதம் 0.66 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படாமை மற்றும் கணக்கேடுகள் உரிய முறையில் பேணப்படாமை. |
| (ஆ) அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளின் கட்டுப்பாடு | பங்களிப்பாளர்களுக்காக தனிப்பட்ட கணக்குகள் பேணப்படாமை மற்றும் அங்கத்துவத்தை நீக்கும் பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்படாமை. |